செய்தி வெளியீடு எண் :2174 நாள் : 01.12.2022

# செய்தி வெளியீடு

மின்சாரச் சட்டம்,2003–ன் சட்டப் பிரிவுகளின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு சட்டப்படியான ஆணையமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தில் தற்போது காலியாக உள்ள உறுப்பினர் (சட்டம்) பதவியை நிரப்புவதற்காக, சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு திரு வீ.பாரதிதாசன் அவர்களின் தலைமையில், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் மத்திய மின்சார அதிகார அமைப்பின் தலைவர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட தேர்வுக்குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

01.12.2022 இன்று நடைபெற்ற தேர்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் உறுப்பினர் (சட்டம்) பதவியை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் 17.12.2022 அன்று மாலை 6.00 மணி வரை வரவேற்று நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இது குறித்த விவரங்கள் இணையதள முகவரி **http://www.tn.gov.in/ department/7** ல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் உறுப்பினர் (சட்டம்) பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in